# ஒற்றுமை

சாந்தனும், மாதவனும் இரண்டாம் வகுப்பில் படிக்கின்றார்கள். ஒருநாள் மாதவன் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டு இருந்தான். மழை வந்துவிட்டது. மழைக்கு ஒதுங்கி ஒரு மரத்தடியில் நின்றான். அந்த வழியால் சாந்தன் குடைபிடித்துக் கொண்டு வந்தான்.



மாதவன் : சாந்தா, உன்னோடு குடைக்குள் வரலாமா?

சாந்தன் : வேண்டாம்! சின்னக் குடை; இதில் இரண்டு பேர் போக முடியாது. நீ வராதே.



மாதவன் : என்னைப் பிடித்துத் தள்ளாதே!

சாந்தன் : சொன்னால் சொன்னதுதான். நீ வரவேண்டாம். வீணாகச் சண்டைக்கு வராதே.

மாதவன் : அப்படியா? உன் குடையையும், உன்னையும் என்ன செய்கின்றேன் பார்

சாந்தன் : முதலில் குடைக்குள் வரக் கேட்டாய் இப்போது சண்டைக்கும் வருகின்றாயா?

மாதவன் : அடிக்காதே. குடை உடையும்.

சாந்தன் : உடைந்தால் என்ன? என்னுடைய குடைதானே. உடையட்டும்.



மாதவன் : உன் குடையின் நிலையைப் பார்.

சாந்தன் : குடையை எறியாதே.

குடை : சிறுவர்களே! வீணாக ஏன் சண்டை பிடிக்கின்றீர்கள்? உங்களுக்குப் புத்தி இல்லையா? சண்டை பிடித்து இருவருமே நனைகின்றீர்கள். சாந்தா, நீ உன் குடைக்குள் மாதவனையும் அழைத்துச் சென்றிருக்கலாமே. அப்போது இருவருமே நனைந்திருக்கவும் மாட்டீர்கள்; சண்டையும் வந்திருக்காது.

சாந்தன் : ஆமாம், குடை சொல்வது சரிதான். நான் செய்தது தவறு. மாதவனை குடைக்குள் கூட்டிச் சென்று இருக்கலாம்.

மாதவன் : நான் செய்ததும் தவறுதான். நான் சாந்தனிடம் சண்டை பிடித்திருக்கக் கூடாது.

சாந்தன் : வா மாதவா. இருவருமே குடைக்குள் சேர்ந்து போவோம்.

மாதவன் : மிகவும் நன்றி சாந்தா.

சாந்தன் : நாம் இருவருமே நன்றி சொல்ல வேண்டியது குடைக்கு அல்லவா?

குறிப்பு : பாத்திரமேற்று உணர்வு பூர்வமாக வாசிக்க மாணவரை வழிப்படுத்துக.